TNTS090002442019

மாண்பமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்.

**முன்னிலை : திரு.M. மாரி, M.S.W., L.L.B.,**

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 23– ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**C.C.No.83/2019**

அரசுக்காக: காவல் ஆய்வாளர்,
குருவிகுளம் காவல் நிலையம்
(குருவிகுளம் காவல் நிலைய குற்ற எண்.237/2015)

……... குற்றமுறையீட்டாளர்

/எதிர்/

பாலமுருகன், வயது, 48/2015,
த/பெ. அஞ்சல்,
கீழத்திருவேங்கடம்.

……. எதிரி

| | | |
|---|---|---|
| **1.** | Case Number | CC No. 83/2019 |
| **2.** | Name of the Police Station and Crime Number | Kuruvikulam Police Station<br>Crime No.237/2015 |
| **3.** | Name of the Accused | Balamurugan |
| **4.** | Date of Occurrence | 17.11.2015 |
| **5.** | Date of surrender | -- |
| **6.** | Date of Arrest | 27.07.2016 |
| **7.** | Period of remand | 15 days |
| **8.** | Date of release on bail | 10.08.2016 |
| **9.** | Date of filing final report | 26.02.2019 |
| **10.** | Date of Commencement of trial | 14.05.2026 |
| **11.** | Date of Chief examination | PW1 \| 14.05.2026 |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | PW2 | 14.05.2026 |
| | | PW3 | 14.05.2026 |
| | | PW4 | 18.06.2026 |
| **12.** | Date of Cross examination | PW1 | 14.05.2026 |
| | | PW2 | 14.05.2026 |
| | | PW3 | 14.05.2026 |
| | | PW4 | 18.06.2026 |
| **13.** | Date of Conclusion of trial | 19.06.2026 | |
| **14.** | Plea of the accused | Not guilty | |
| **15.** | Finding of the Court | The accused is found not guilty for the offences u/s.420, 294(b), 506(1) of IPC and therefore the accused is acquitted under Section 248(1) Cr.P.C. | |

கடந்த 27.02.2019 தேதியன்று இந்நீதிமன்றத்தின் ஆண்டுப்பட்டிகை எண். 83/2019 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி பொது வழக்கறிஞர் நிலை –1 அவர்கள் ஆஜராகியும், எதிரிதரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.அல்லிராஜா, B.A.,B.L., ஆகியோர்கள் ஆஜராகியும் இவ்வழக்கானது 23.06.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வரப்பெற்று ஆவணங்களை பரிசீலனை செய்து, இந்நீதிமன்றம் வழங்கும் ...

**<u>தீ ர் ப் பு ரை</u>**

இவ்வழக்கானது குருவிகுளம் காவல் நிலையத்தார் எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 420, 294(b), 506(2)–ன் கீழ் குற்ற எண். 237/2015–ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள கு.வி.மு.ச. பிரிவு 173(2)–ன் கீழ் இறுதி அறிக்கையை நீதிமன்றம் கவனமுடன் பரிசீலனை செய்து போதுமான காரணம் எதிரி மீது குற்றம் விசாரிக்கத்தக்க முகாந்திரம் உள்ளது என இந்நீதிமன்றம் திருப்தி அடைந்து பின் கு.வி.மு.ச. பிரிவு 190 (1) (b)–ன் கீழ் இவ்வழக்கு நீதிமன்றம் தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டது.

**<u>1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :</u>**

1.1 இவ்வழக்கின் புகார்தாரர் அவருக்கு தெரிந்தவர் மூலம் அறிமுகமான எதிரி கீழத்திருவேங்கடம் அஞ்சல் மகன் பாலமுருகன் என்பவரிடம் 2013–ம் வருடம் மே

மாதம் முதல் 1 லட்சம் ரூபாய் ஏலச்சீட்டுக்கு பணம் ரூ.43,000/– கட்டியிருந்ததும் சீட்டின் 17–வது மாதம் எதிரி சாட்சி–1 க்கு சீட்டு விழுந்திருப்பதாக சொன்னதும், பின்பு அந்த சீட்டிற்கான தொகையை கேட்டும் கொடுக்காமல் ஏமாற்றி மோசடி செய்து வந்ததும், 17.11.2015–ம் தேதி மதியம் 02.00 மணிக்கு புகார்தாரர், சாட்சி–2 உடன் கே.ஆலங்குளம் பஸ் ஸ்டாப்பில் நின்றபோது அந்த வழியாக வந்த எதிரியிடம் புகார்தாரர் சீட்டுப்பணத்தை கேட்டதற்கு எதிரி புகார்தாரரைப் பார்த்து "தேவிடியா மகனே, புண்ட மகனே பணத்தை தரமுடியாதுடா" என்று அசிங்கமாக பேசி "இன்னொரு தடவை பணம் கேட்டால் உன்னைக் கொன்றுபுடுவேன்" என்று வன்முறு கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டு, எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 420, 294(b), 506(2)–ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு குருவிகுளம் காவல் நிலைய ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் வழங்கி, குற்றம் குறித்து வினவிய விபரம் ;–</u>

2.1 இவ்வழக்கின் எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 204–ன்படி அழைப்பணை அனுப்பி எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச.பிரிவு 207–ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டு, போதிய காலஅவகாசம் அளித்து, இரு தரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலனை செய்தவகையில் கு.வி.மு.ச. பிரிவு 240(1)–ன் கீழ் எதிரி மீது கீழ்க்கண்டவாறு குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டன.

1) இவ்வழக்கின் புகார்தாரர் அவருக்கு தெரிந்தவர் மூலம் அறிமுகமான எதிரி கீழத்திருவேங்கடம் அஞ்சல் மகன் பாலமுருகன் என்பவரிடம் 2013–ம் வருடம் மே மாதம் முதல் 1 லட்சம் ரூபாய் ஏலச்சீட்டுக்கு பணம் ரூ.43,000/– கட்டியிருந்ததும் சீட்டின் 17–வது மாதம் எதிரி சாட்சி–1 க்கு சீட்டு விழுந்திருப்பதாக சொன்னதும், பின்பு அந்த சீட்டிற்கான தொகையை கேட்டும் கொடுக்காமல் ஏமாற்றி மோசடி செய்து வந்த குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 420–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

2) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, எதிரி 17.11.2015–ம் தேதி மதியம் 02.00 மணிக்கு புகார்தாரர், சாட்சி–2 உடன் கே.ஆலங்குளம் பஸ் ஸ்டாப்பில் நின்றபோது அந்த வழியாக வந்த எதிரியிடம் புகார்தாரர் சீட்டுப்பணத்தை கேட்டதற்கு எதிரி புகார்தாரரைப்

பார்த்து "தேவிடியா மகனே, புண்ட மகனே பணத்தை தரமுடியாதுடா" என்று அசிங்கமாக பேசிய குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன.

3) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக, எதிரி புகார்தாரரைப் பார்த்து "இன்னொரு தடவை பணம் கேட்டால் உன்னைக் கொன்றுபுடுவேன்" என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 506(1)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்ததாக குற்றச்சாட்டு வனையப்பட்டன

3. மேற்படி வனையப்பட்ட குற்றச்சாட்டுக்களை எதிரிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, விளக்கப்பட்டு குற்றத்தை ஒத்துக்கொள்கிறீர்களா ? அல்லது விசாரணையை வேண்டுகிறீர்களா? என்று வினவப்பட்டது. அப்போது எதிரி குற்றச்சாட்டுக்களை மறுத்தார்.

4. இதற்குப்பின் அரசு தரப்பில் சாட்சிகளை ஆஜர்படுத்த உத்தரவிடப்பட்டது. அதனடிப்படையில், அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

5. அரசு தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டபின், அவர்களது சாட்சியத்தில் எதிரிக்கு எதிரான சங்கதிகள் பற்றி நேரடியாக விளக்கம் பெறுவதற்காக கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)–ன் கீழ் கேள்விகள் கேட்டபோது எதிரி பொய் என்று மறுத்தார்.

## 6. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் :–</u>

1) எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபித்துள்ளனரா?

2) எதிரி குற்றவாளி எனில், எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?

**7. <u>நிரூபண சுமை :–</u>**

இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 101–ன் படி(BSA– 104) அரசு தரப்பில்தான் எதிரிகள் குற்றத்தை செய்தார்கள் என்பதை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பால் நிரூபிக்க வேண்டிய சுமையானது (Burden of proof) அரசு தரப்பை சார்ந்ததாகும்.

8. <u>அரசு தரப்பு சாட்சியங்களும், பரிசீலனையும் :–</u>

8.1 இந்த வழக்கில் எதிரி மீது இது முதலாவது குற்றச்சாட்டு என்பதும், இவ்வழக்கின் புகார்தாரர் அவருக்கு தெரிந்தவர் மூலம் அறிமுகமான எதிரி கீழத்திருவேங்கடம் அஞ்சல் மகன் பாலமுருகன் என்பவரிடம் 2013–ம் வருடம் மே மாதம் முதல் 1 லட்சம் ரூபாய் ஏலச்சீட்டுக்கு பணம் ரூ.43,000/– கட்டியிருந்ததும் சீட்டின் 17–வது மாதம் எதிரி சாட்சி–1க்கு சீட்டு விழுந்திருப்பதாக சொன்னதும், பின்பு அந்த சீட்டிற்கான தொகையை கேட்டும் கொடுக்காமல் ஏமாற்றி மோசடி செய்து வந்த குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 420–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

8.2 மேற்படி முதல் குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 415, 420 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:–

<u>பிரிவு 415:– ஏமாற்றுதல் (Cheating) :–</u>

ஒருவரை வஞ்சிப்பதன் மூலம் அவ்வாறு வஞ்சிக்கப்பட்டவர், சொத்து எதனையும் யாருக்காவது கொடுக்கும்படியோ, அல்லது சொத்தை நிறுத்தி வைத்துக் கொள்வதற்கு ஒப்புக்கொள்ளும்படியோ மோசடியாக அல்லது நேர்மையற்ற முறையில் தூண்டுகிறவர் ஏமாற்றுபவராவார். உடல், மனம், புகழ் அல்லது சொத்துக்குச் சேதம் உண்டாக்குகிற வகையில் ஒருவரை வஞ்சித்து அத்தகைய செயலைச் தூண்டுகிறவர் ஏமாற்றுபவராவார்.

**<u>விளக்கம் :</u>** சங்கதிகளை நேர்மையற்ற முறையில் மறைத்து வைத்தல், இந்தப் பிரிவின்படி பொருளின்படி வஞ்சித்தல் ஆகும்.

<u>பிரிவு 420 :– ஏமாற்றுதலும், பொருளைக் கொடுப்பதற்கு நேர்மையற்ற முறையில் இணங்கச் செய்தலும் (Cheating and dishonestly inducing delivery of property)</u> – ஏமாற்றி பொருள் ஒன்றை ஒருவருக்குக் கொடுக்க, அல்லது மதிப்புமிக்க ஆவணத்தை அல்லது கையொப்பமிட்ட அல்லது முத்திரை வைக்கப்பட்ட ஒரு மதிப்புமிக்க ஆவணமாக மாற்றப்படக்கூடிய தன்மையுடையதுமான எதையும் முழுவதையுமோ அல்லத எந்தப் பகுதியையோ எழுதும்படி, மாற்றும்படி, அல்லது அழிக்கும்படி நேர்மையற்ற முறையில்

இணங்கச் செய்கிற ஒருவர் ஏழு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும். மற்றும் அவரை அபராதத்திற்கு உள்ளாக்கவும் செய்யலாம்.

8.3 சம்பவ இடமானது கே.ஆலங்குளம் பஸ் ஸ்டாப் ஆகும். இதனை அ.சா.1 சாட்சி மூலம் அறியலாம். எதிரி இறந்துபோன சந்திரசேகரைப் பார்த்து "தனக்குத் தெரிந்தவர் மூலம் அறிமுகமான கீழத்திருவேங்கடம் சேர்ந்த அஞ்சல் மகன் பாலமுருகன் என்பவரிடம் கடந்த 2013–ம் ஆண்டு 5–ம் மாதம் முதல் 1 லட்சம் ரூபாய் ஏல சீட்டில் சேர்ந்து 17 மாதங்கள் ரூ.43,000/– கட்டியிருக்கிறேன். 17–ம் மாதம் முடிவில் சீட்டு எனக்கு விழுந்துவிட்டதாக மேற்படி பாலமுருகன் கூறினார். ஆனால் அதன்பின்னர் சீட்டுத் தொகை எனக்கு தராமல் தொடாந்து ஏமாற்றி வந்தார். பின்னர் விசாரிக்கையில், பாலமுருகன் இதுபோல ஊரில் நிறைய பேரிடம் சீட்டுப்பணம் மோசடி செய்து உள்ளது தெரிய வந்தது. இந்நிலையில், 17.11.2015–ம் தேதி மதியம் சுமார் 2 மணியளவில் தான் தனது ஊருக்கு செல்வதற்காக பஸ் ஏறுவதற்காக கே.ஆலங்குளம் பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தபோது மேற்படி பாலமுருகன் அவருக்குச் சொந்தமான TVS XL இருசக்கர வாகனத்தில் வந்தவரைப் பார்த்து பணத்தை தருமாறு கேட்டதற்கு பாலமுருகன் தன்னைப் பார்த்து "தேவிடியா மகனே புண்ட மகனே பணத்தை தரமுடியாதுடா உன்னாலானதை பார்த்துக்கோ," என்று கூறியுள்ளார். மேலும், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான சந்திரசேகர் என்பவர் 07.12.2024–ம் தேதியன்று இறந்துவிட்டதால் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி பிரிவு 420 உட்கூறுகள் பொருந்தவேண்டும். எதிரி ஒருவரை வஞ்சிப்பதன் மூலம் சொத்து எதனையும் யாருக்காவது கொடுக்கும்படியோ அல்லது மோசடியாக நேர்மையற்ற முறையில் தூண்டி, அதன்படி பொருள் ஒன்றை ஒருவருக்கு கொடுத்து அந்த மதிப்புறு ஆவணத்தை எழுதுதல், மாற்றுதல், அழித்தல் போன்றவற்றை நேர்மையற்ற முறையில் செயல்பட்டிருக்க வேண்டும்.ஆனால், அரசு தரப்பு வழக்கில் முதலில் இறந்துபோன புகார்தாரர் எதிரியிடம் கடந்த 2013–ம் ஆண்டு 5–ம் மாதம் முதல் 1 லட்சம் ஏலச்சீட்டு எதிரி நடத்தினார் என்பதற்கான எந்த ஆவணத்தையும் இந்த வழக்கில் அரசு தரப்பில் சான்றாவணங்களாக குறியீடு செய்யவில்லை. அதேபோன்று புகார்தாரர் எதிரியிடம் 17

மாதம் ரூ.43,000/— கட்டினார் என்பதற்கான வரவு ரசீது, ஏல நோட் போன்ற ஆவணங்கள் இந்த வழக்கில் எதிரியிடம் இருந்ததா? புகார்தாரரிடம் இருந்ததா? என்றும், அவ்வாறு இருப்பின், அவை அரசு தரப்பு ஆவணமாக குறியீடு செய்யப்படவில்லை. மேலும், அரசு தரப்பில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணையில், "ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், புகார்தாரர் சந்திரசேகரை தெரியும் என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் தங்களது நீதிமன்ற முதல் விசாரணையில், "ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், புகார்தாரர் சந்திரசேகரை தெரியாது என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். அவர்களை குறுக்கு விசாரணை செய்தபோதும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளிக்கவில்லை. மேற்படி இந்திய சாட்சிய சட்டத்தின் படியும், மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில் சாட்சியம் என்பது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை இணைந்தது தான் சாட்சியம் என்ற சட்ட கோட்பாட்டின் அடிப்படையில் அ.சா.1 முதல் அ.சா.3—ன் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை எடுத்துக்கொண்டு அ.சா.1 முதல் அ.சா.3—ன் சாட்சியம் நம்பும்படியும், சாட்சியத்திற்கு ஒத்துரைக்கும் விதமாக இல்லை (Collaboration) என இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

8.4. எனவே, இந்த அரசு தரப்பு வழக்கை சந்தேகிக்கும் வகையில் உள்ளது. ஆதலால் இவ்வழக்கின் இறந்துபோன சந்திரசேகர் என்பவர் 2013—ம் வருடம் மே மாதம் முதல் 1 லட்சம் ரூபாய் ஏலச்சீட்டுக்கு பணம் ரூ.43,000/— கட்டியிருந்ததும் சீட்டின் 17—வது மாதம் எதிரி சாட்சி—1க்கு சீட்டு விழுந்திருப்பதாக சொன்னதும், பின்பு அந்த சீட்டிற்கான தொகையை கேட்டும் கொடுக்காமல் ஏமாற்றி மோசடி செய்து வந்தார் என்பதை அரசு தரப்பு மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 ன் சாட்சியத்தின் மூலம் எதிரி மீதான இ.த.ச. பிரிவு 420—ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால்

சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, எதிரியை இ.த.ச. பிரிவு 420–ன் கீழான குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9. இந்த வழக்கில், எதிரி மீது இரண்டாவது குற்றச்சாட்டு என்பது, எதிரி 17.11.2015–ம் தேதி மதியம் 02.00 மணிக்கு புகார்தாரர், சாட்சி–2 உடன் கே.ஆலங்குளம் பஸ் ஸ்டாப்பில் நின்றபோது அந்த வழியாக வந்த எதிரியிடம் புகார்தாரர் சீட்டுப்பணத்தை கேட்டதற்கு எதிரி புகார்தாரரைப் பார்த்து "தேவிடியா மகனே, புண்ட மகனே பணத்தை தரமுடியாதுடா" என்று அசிங்கமாக பேசிய ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 294(b)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

9.1 மேற்படி இரண்டாவது குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 294 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:–

<u>பிரிவு 294:– ஆபாசச் செயல்களும் பாடல்களும் :– மற்றவர்களுக்குத் தொந்தரவாக இருக்கும்படி</u> –

அ) பொதுவிடம் எதிலும் ஆபாசச் செயல் எதையும் செய்கிற, அல்லது

ஆ) பொதுவிடம் எதிலும் அல்லது அதற்கு அருகில், ஆபாசப் பாடல்கள், கதைப்பாடல் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற, ஒப்பிக்கிற, அல்லது மொழிகிற எவரும் – மூன்று மாதங்கள் வரை சிறைத்தண்டனையோ, அல்லது ஓராயிரம் ரூபாய் வரை அபராதமோ, அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

9.2 சம்பவ இடமானது கே.ஆலங்குளம் பஸ் ஸ்டாப் ஆகும். இதனை அ.சா.1 சாட்சி மூலம் அறியலாம். எதிரி இறந்துபோன சந்திரசேகரைப் பார்த்து "தேவிடியா மகனே புண்ட மகனே பணத்தை தரமுடியாதுடா உன்னாலனதை பார்த்துக்கோ " என்று கூறியுள்ளார். மேலும், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான சந்திரசேகர் என்பவர் 07.12.2024–ம் தேதியன்று இறந்துவிட்டதால் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலானவர்கள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். மேற்படி பிரிவு 294(b) உட்கூறுகள் பொருந்தவேண்டும் எனில், சம்பவ இடமானது

பொது இடமோ அல்லது பொது இடம் அருகில் ஏற்பட்டிருக்க வேண்டும் என கூறப்பட்டதிலிருந்தே இந்த அரசு தரப்பு வழக்கில் அதுபோன்று அ.சா.1 சாட்சி சம்பவ இடம் பொது இடம் என்றோ, பொது இடம் அருகில் என்றோ குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. குறிப்பாக, அ.சா.1 தனது நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில், "ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், புகார்தாரர் சந்திரசேகரை தெரியும் என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் தங்களது நீதிமன்ற முதல் விசாரணையில், "ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், புகார்தாரர் சந்திரசேகரை தெரியாது என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி சம்பவத்தால் பாதிக்கப்பட்ட நபரான சந்திரசேகர் என்பவர் இறந்துவிட்டதால் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்களின் சாட்சியங்களிலிருந்து எதிரிதான் இறந்துபோன சந்திரசேகர் என்பவரை பொது இடத்தில் வைத்து அசிங்கமான வார்த்தைகளால் பேசியதாகவும், அதனால், அவருக்கோ, அல்லது தங்களுக்கோ தொந்தரவு ஏற்பட்டது என்றும் குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. மாறாக அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்து பிறழ் சாட்சிகளாக மாறியுள்ளார்கள். இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 294(b)–ன் கீழான குற்றச்சாட்டில் எதிரி தண்டிக்கப்பட வேண்டுமெனில், பாதிக்கப்பட்ட நபரை பொது மக்கள் மத்தியிலோ, பொது இடத்திலோ, பொது இடம் அருகிலோ பாதிக்கப்பட்டவரை அவமானப்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் ஆபாசமான அருவருக்கத்தக்க மொழி பேசியதால் பாதிக்கப்பட்டவருக்கு தொல்லை ஏற்படுத்தியதாக இருக்க வேண்டும். அப்படி எதுவும் இந்த வழக்கில் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் எதிரிக்கு எதிராக நிரூபணம் செய்யவில்லை என்பதை பரிசீலனை செய்து, **1) கே.ஜெயராம் மஞ்சு எதிர் ஜானகிராஜ் 1990 மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின்படியும், 2) பவன்குமார் எதிர் ஹரியானா (1996) 4 SCC 17 என்ற மாண்பமை உச்சநீதிமன்ற தீர்ப்பில்**

" 294(b)பொருந்துவதற்கு மூன்று கடுமையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என தெளிவுபடுத்தியுள்ளனர். அவை பின்வருமாறு

(i) அந்த செயல் ஒரு பொது இடத்திலோ அல்லது அதன் அருகிலோ செய்யப்பட வேண்டும். அதாவது ஆபாசமான வார்த்தைகள் உச்சரிக்கப்பட வேண்டும்.

(ii) அந்த வார்த்தைகளோ அல்லது செயலோ உண்மையில் ஆபாசமானதாக இருக்க வேண்டும்.

(iii) அந்த ஆபாச வார்த்தை கேட்டதால் மற்றவர்களுக்கு தொந்தரவு ஏற்பட்டிருக்க வேண்டும்.

என்றும் கூறப்பட்டுள்ளது. மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சியத்தின் மூலம் எதிரி மீதான இ.த.ச. பிரிவு 294(b) –ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் மேற்படி 294(b) உட்கூறுகளையும், மாண்மை உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றம் முன்தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளதையும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, எதிரியை இ.த.ச. பிரிவு 294(b) குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

10. இந்த வழக்கில், எதிரி மீது மூன்றாவது குற்றச்சாட்டு என்பது, எதிரி புகார்தாரரைப் பார்த்து "இன்னொரு தடவை பணம் கேட்டால் உன்னைக் கொன்றுபுடுவேன்" என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரி மீது இ.த.ச. பிரிவு 506(1)–ன் கீழ் தண்டிப்பதற்குரிய குற்றம் புரிந்தாரா? என்பதை அரசு தரப்பு சாட்சியத்திலிருந்து பின்வருமாறு பரிசீலனை செய்யலாம்.

10.1. மேற்படி மூன்றாவது குற்றச்சாட்டை இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 503, 506 உட்கூறுகள் அரசு தரப்பால் சந்தேகத்திற்கு அப்பால் நிரூபணம் செய்ய வேண்டும். அதன் ஊட்கூறுகள் பின்வருமாறு:–

10.2. **<u>இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 503–மிரட்டல் குற்றம்(Criminal intimidation):</u>** <u>உட்கூறுகள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது</u> "ஒருவருடைய உடலுக்கு பெயருக்கு அல்லது சொத்துக்கு அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள ஒருவரின் உடலுக்கு

அல்லது பெயருக்குக் கேடு இழைப்பதாக அவருக்குப் பீதி விளைவிக்கும் உட்கருத்துடன், அல்லது அத்தகைய மிரட்டல் நிறைவேற்றப்படுவதைத் தவிர்க்கும்பொருட்டு, அவர் சட்டபடி செய்யக் கட்டுப்பட்டிராத செய்கை எதனையும் செய்யாது விடுவதை, விளைவிக்க அச்சுறுத்துகிற ஒருவர் மிரட்டல் குற்றம் செய்தவராவார்.

**விளக்கம்:** அச்சுறுத்தப்பட்டவர் அக்கறை கொண்டுள்ள இறந்த ஒருவரின் பெயருக்குக்கேடு இழைப்பதான அச்சுறுத்தலும் இந்தப் பிரிவில் அடங்கும்".

10.3 **இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 506 :–மிரட்டலுக்குத் தண்டனை**

**பிரிவு 506(i) :–** மிரட்டல் குற்றம் செய்கிற ஒருவர் இரண்டாண்டுகள் வரை சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

**பிரிவு 506(ii) :** மிரட்டல் குற்றம் செய்கிற ஒருவர் ஏழாண்டுகள் வரை சிறைத்தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

10.4 மூன்றாவது குற்றச்சாட்டை பொறுத்து அ.சா.1 ஆகிய சாட்சி 161 வாக்குமூலத்தில். எதிரி இறந்துபோன சந்திரசேகரைப் பார்த்து "தேவிடியா மகனே புண்ட மகனே பணத்தை தரமுடியாதுடா உன்னாலனதை பார்த்துக்கோ இன்னொரு தடவை என்கிட்ட பணம் கேட்ட அன்றைக்கே வெட்டிக் கொன்றுபோடுவேன்" என்று கொலை மிரட்டல் விடுத்தார் என கூறியுள்ளார். சம்பவத்தால் பாதிக்கப்பட்ட சந்திரசேகர் என்பவர் இறந்துவிட்டதால் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சியான அ.சா.1 நீதிமன்ற முதல் விசாரணையில், "ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், புகார்தாரர் சந்திரசேகரை தெரியும் என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர்கள் தங்களது நீதிமன்ற முதல் விசாரணையில், "ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், புகார்தாரர் சந்திரசேகரை தெரியாது என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை" என்றும் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி முதல் விசாரணை சாட்சியமானது முன்பு சொன்ன 161

வாக்குமூலம், ஆகியவற்றில் எதிரி இறந்துபோன புகார்தாரரைப் பார்த்து கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சொல்லிவிட்டு நீதிமன்ற முதல் விசாரணை சாட்சியத்தில் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். **மேற்படி இந்திய சாட்சிய சட்டத்தின் படியும், மாண்புமிகு உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்ற முன் தீர்ப்புகளின் அடிப்படையில் சாட்சியம் என்பது முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை இணைந்தது தான் சாட்சியம் என்ற சட்ட கோட்பாட்டின் அடிப்படையில்** அ.சா.1–ன் சாட்சியத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை எடுத்துக்கொண்டு அ.சா.1–ன் சாட்சியம் அரசு தரப்பை ஒத்துரைக்கும் விதமாக இல்லை (Collaboration) எனவும், அ.சா.1–யை எதிரி கொலைமிரட்டல் விடுத்ததால் இறந்துபோன சந்திரசேகருக்கு உயிர் பயமோ, அச்சுறுத்தலோ எதுவும் ஏற்பட்டதாக சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.1 முதல் அ.சா.3 இந்நீதிமன்றம் முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. மேற்படி இ.த.ச. பிரிவு 506(1) கீழ் எதிரிகள் தண்டிக்கப்பட வேண்டும் எனில் எதிரியின் செயலால் இறந்துபோன சந்திரசேகருக்கு உயிர் பயம், அச்சுறுத்தல் ஏற்பட்டது என்பதைக் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை என்பதைக் கருத்தில் கொண்டும், அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிருபணம் செய்யவேண்டும். ஆனால் இந்த வழக்கில் அரசு தரப்பு மேற்படி அ.சா.1 முதல் அ.சா.3–ன் சாட்சியத்தின் மூலம் எதிரி மீதான இ.த.ச. பிரிவு 506(1)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினரால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதி, எதிரியை இ.த.ச. பிரிவு 506(1)–ன் கீழான குற்றச்சாட்டு மெய்ப்பிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

11. மேலும், அ.சா.4 ஆன காவல்துறை அதிகாரியின் சாட்சியத்தை பரிசீலிக்கையில் அவர் தனது சாட்சியத்தில், இறுதியறிக்கையில் சொல்லப்பட்டுள்ள அரசு வழக்கிற்கு ஆதாரமாக வழக்கு கோப்புகளின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 ன் சாட்சியத்தின் மூலம், இவ்வழக்கின் புகார் மனு சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை குறித்தும், விசாரணை அதிகாரிகள் சம்பவ இடம் சென்று தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் குறித்தும் மட்டுமே தெரிய வருகிறது. இந்நிலையில் இவ்வழக்கில் புகார் மனு கொடுத்ததாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் சந்திரசேகர் என்பவர் 07.12.2024–ம்

தேதி இறந்துவிட்டதால், சம்பவத்தை நேரடியாக கண்ணுற்றதாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்படும் அ.சா.1 முதல் அ.சா.3 ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ் சாட்சியம் அளித்துள்ள நிலையில், வழக்கு கோப்புகளை மட்டுமே பார்வையிட்டு அதனடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.4-ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு, எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்க இயலாது என்றும் இந்நீதிமன்றம் கருதி எதிரி இ.த.ச. பிரிவுகள் 420, 294(b), 506(1)-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

12) **<u>எதிரி குற்றவாளி எனில், எதிரிக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன?</u>**

16.1 மேற்படி அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட இ.த.ச. பிரிவுகள் 420, 294(b), 506(1)-ன் கீழ் குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பால் நிருபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு எந்தவித தண்டனையும் வழங்க இயலாது என இந்நீதிமன்றம் தீர்மாணிக்கிறது.

13. இறுதியாக, எதிரி இ.த.ச. பிரிவுகள் 420, 294(b), 506(1)-ன் கீழான குற்றச்சாட்டுக்கள் கீழான குற்றவாளி இல்லை என தீர்மானித்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி ஏற்கனேவே இவ்வழக்கு சம்மந்தமாக இந்நீதிமன்றத்தில் வழங்கியிருந்த பிணை முறிவு பத்திரத்தை மேல்முறையீடு காலம் முடிந்த பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

14. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாததால் அது குறித்து உத்தரவு ஏதுமில்லை.

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை திருத்தம் மேற்கொள்ளப்பட்டு 2026-ம் ஆண்டு ஜுன் செவ்வாய்க்கிழமை, 23-ம் நாளான இன்று என்னால் இந்தத் தீர்ப்புரை அவையறிப்பகரப்பட்டது.

(ஒம்/-எம்.மாரி)
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகள்:</u>**

1. அ.சா.1 திரு. அருள்ராஜ் ( சம்பவத்தை நேரில் கண்ணுற்றவர்)
2. அ.சா.2 திரு. கணபதி (சம்பவத்தை நேரில் கண்ணுற்றவர்)
3. அ.சா.3 திரு. முருகன் (சம்பவத்தை நேரில் கண்ணுற்றவர்)
4. அ.சா.4 திரு. செல்லத்துரை (தலைமைக்காவலர், குருவிகுளம் காவல் நிலையம்)

**<u>அரசுத் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 19.11.2015 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 19.11.2015 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | 19.11.2015 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | 19.11.2015 | மாதிரி வரைபடம் |

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள் :</u>** இல்லை

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> :** இல்லை.

(ஒம்/–எம்.மாரி)
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.